**KALAM – International Research Journal**
**Faculty of Arts and Culture,**
**South Eastern University of Sri Lanka.**
**12 (1), 2019**

# ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்: சமகாலத் தொய்வுகளும் அவசியமான சீர்திருத்தங்களும்

**எம்.எம்.பாஸில்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
அரசியல் விஞ்ஞானத்துறை
இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்.

**எம்.ஏ.எம்.பௌசர்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
அரசியல் விஞ்ஞானத்துறை
இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்.

Correspondence: fazrasm@seu.ac.lk

**கட்டுரைச் சுருக்கம்:**

*இலங்கையின் இரண்டாவது சிறுபான்மை தேசிய இனமான முஸ்லிம்கள் மிக நீண்டகால அரசியல் வரலாற்றினைக் கொண்டவர்கள். காலனித்துவ காலத்தில் மத, கலாசார மறுமலர்ச்சியுடன் ஆரம்பித்த முஸ்லிம் அரசியல், இலங்கையின் சுதந்திரத்திற்குப் பிற்பாடு சிங்கள பௌத்த தேசியத்துடனும் தமிழ் தேசியத்துடனும் இரண்டறக் கலந்திருந்தது. இருந்தபோதிலும் 1980 களுக்குப் பின்னர் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்த அசாதாரண சூழ்நிலை முஸ்லிம்களுக்கென்று தனியான அரசியல் இயக்கமொன்று தோற்றம் பெறுவதனை இயலுமானதாக்கியது. இவ்விதம் மறைந்த எம்.எச்.எம். அஷ்ர∴பினால் முஸ்லிம்களுக்கென தோற்றுவிக்கப்பட்ட அரசியல் இயக்கமே ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகும். இவ்வியக்கம் முஸ்லிம்களுக்கென தனித்துவ அரசியல் அடையாளத்தினை பெற்றுக் கொடுத்ததுடன் அஷ்ர∴பின் தலைமைத்துவத்தின் கீழ் தேசிய அரசியலில் மிகவும் வீரியத்துடன் செயற்பட்டது. எனினும் அஷ்ர∴பின் திடீர் மறைவு அவர் உருவாக்கிய அரசியல் இயக்கத்தினை பிளவுபடுத்தியதுடன் முஸ்லிம் அரசியல் வீழ்ச்சியுறுவதற்கும் காரணமாக அமைந்தது. இப்பின்புலத்தில் இலங்கை முஸ்லிம் அரசியலின் மிக முக்கிய அங்கமாகத் திகழும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் சமகாலத் தொய்வுகளையும் அதிலிருந்து மீள்வதற்கு அவசியமான சீர்திருத் தங்களையும் இக்கட்டுரை அலசுகிறது.*

**பிரதான சொற்கள்:** *அஷ்ர∴ப், முஸ்லிம் அரசியல், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்*

## 1. அறிமுகம்

இலங்கை பன்மைக்கலாசார பண்புகளைக் கொண்ட ஒரு வளர்முக நாடாகும். இந்நாட்டில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், மலாயர்கள் போன்ற இனங்கள் வாழ்கின்றன. மத ரீதியாக பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் உள்ளிட்ட சமயங்கள் இலங்கையர்களால் பின்பற்றப்படுகின்றன. இலங்கையில் தமிழர்களுக்கு அடுத்த, இரண்டாவது சிறுபான்மை தேசிய இனத்தவராக முஸ்லிம்கள் உள்ளனர். மிக நீண்டகால வரலாற்றினைக் கொண்ட முஸ்லிம்கள், இலங்கையிலுள்ள ஏனைய இனத்தவர்களுடன் இணக்கமான உறவினைப் பேணிவந்துள்ளனர்.

முஸ்லிம்கள் இலங்கையின் மொத்த சனத்தொகையில் 9.7 சதவீதத்தினராவர் (Department of Census and Statistics - Sri Lanka, 2012). முழு இலங்கையிலும் சிதறி வாழும் முஸ்லிம்கள், கிழக்கிலங்கையில் மிகவும் செறிவாக வாழ்ந்து வருகின்றனர். எனினும் முஸ்லிம்களின் மொத்த சனத்தொகையில் 2/3 பகுதியினர் கிழக்கு மாகாணத்திற்கு வெளியே வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. வரலாற்று ரீதியாக முஸ்லிம்கள் பெரும்பான்மை சிங்களவர்களுடனும் சிறுபான்மை தமிழ் மக்களுடனும் மிக நெருக்கமான சமூக, கலாசாரப் பிணைப்பினைக் கொண்டுள்ளனர் (Fowsar, 2013).

முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான உறவினை எடுத்துக்காட்டும் பேராசிரியர் றமீஸ் அப்துல்லா, ''வரலாற்று ரீதியாக முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான உறவு ஆழமாக வேரூன்றியுள்ளது'' என்கிறார் (Abdullah, 2004). சிங்கள மக்களுடனான முஸ்லிம்களின் உறவு குறித்து வரலாற்று ஆய்வாளர் லோ.தேவராஜா குறிப்பிடும் போது, ''முஸ்லிம்கள் இலங்கை மண்ணில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட இணக்கமான வரலாற்றினைக் கொண்டுள்ளனர். அவர்கள் தமது நீண்ட வரலாற்றுக் காலத்தில் சிங்கள மக்களுடன் நல்லுறவினையே கடைப்பிடித்து வந்துள்ளனர்'' என்று கூறுகின்றார் (Dewaraja, 1994).

இலங்கை முஸ்லிம்கள் தமிழ் மொழியினைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளனர். எனினும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழும் முஸ்லிம்கள் சிங்கள மொழியினையும் தமது அன்றாட கருமங்களில் பயன்படுத்தும் வழக்கத்தினைக் கொண்டுள்ளனர். வர்த்தகம், விவசாயம், மீன்பிடி போன்றவற்றை தமது பிரதான ஜீவனோபாயமாகக் கொண்டுள்ள முஸ்லிம்கள், அரசியல், பொருளாதார, மத, கலாசார ரீதியாக தனித்துவமான ஒரு சமூகத்தவராக வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது (Fowsar, 2013).

இலங்கை முஸ்லிம்கள் சமய அடிப்படையில் இஸ்லாத்தினை பின்பற்றுகிறபோதிலும் வாழ்வியல் நடத்தைக் கோலங்களில் கிழக்கு முஸ்லிம்களுக்கும் ஏனைய பிரதேசங்களில் வாழுகின்ற முஸ்லிம்களுக்குமிடையே சில வேறுபாடுகள் இருக்கின்றன. மிக நீண்டகாலமாக கிழக்கு முஸ்லிம்கள் தமிழர் கலாசாரத்துடன் இரண்டறக் கலந்த அனுபவத்தினைக் கொண்டிருக்க, ஏனைய பிரதேசங்களில் உள்ள முஸ்லிம்களோ சிங்கள பௌத்த சமூகத்துடன் அதிக பிணைப்பினைக் கொண்டவர்களாக வாழ்ந்து வருகின்றனர். சமூக, கலாசார ரீதியிலான இவ்வகை வேறுபடுத்தல் முஸ்லிம் அரசியலிலும் கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் முஸ்லிம் தனித்துவ அடையாளத்தினை நிறுவுவதற்கான அரசியல் உந்துதல் ஆங்கிலேயேர் ஆட்சியிலேயே உருவானது. அதற்கான ஆரம்பக் கட்டுமானத்தினை மேற்கொள்வதில் அறிஞர் சித்தி லெப்பை, ரீ.பி.ஜாயா, அஸீஸ் முதலானோரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். இருப்பினும் 1889 இல் எம்.சீ.அப்துல் ரஹ்மான் பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சியாளர்களினால் முதல் முஸ்லிம் சட்டசபை அங்கத்தவராக நியமிக்கப்படும் வரை முஸ்லிம்களின் அரசியல் பிரவேசம் வரையறுக்கப்பட்டதாகவே இருந்தது. பின்னர் வர்த்தகத்தில் மேம்பட்டிருந்த முஸ்லிம் அரசியல் உயர்குழாமினரின் பங்களிப்புடன் முஸ்லிம்கள் அரசியல் மயப்படுத்தப்பட்டனர். இக்காலத்தில் முஸ்லிம் அரசியல் கொழும்பினை மையப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது (Fowsar, 2013).

முஸ்லிம் தனித்துவ அரசியல் சிந்தனை பற்றிய கருத்தாடல் இருபதாம் நூற்றாண்டின் பின்னரே மக்கள்மயப்படுத்தப்பட்டது. அதற்கான தளம் கிழக்கிலங்கையில் நிறுவப்பட்டது. இதன் மூலம் கொழும்பினை மையம் கொண்டிருந்த முஸ்லிம் அரசியல், கிழக்கில் புத்துயிர் பெற்றது; முஸ்லிம்களை ஒரு தேசமாக ஒழுங்கமைப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. அதற்கான அரசியல் தலைமைத்துவத்தினை கலாநிதி எம்.எச்.எம். அஷ்ர∴ப் வழங்கினார். தமிழர் தேசியத்திலிருந்து பிரிந்து, முஸ்லிம்களுக்கென தனியானதொரு அரசியல் இயக்கத்தினை அவர் நிறுவினார். அவ்வியக்கத்தின் மூலம் முஸ்லிம் அரசியலை ஒரு நிலைப்படுத்தியதோடு முஸ்லிம்களுக்கான தேசிய அரசியல் அடையாளம் ஒன்றினையும் அவர் பெற்றுக் கொடுத்தார்.

துரதிஷ்டவசமாக 2000 ஆம் ஆண்டு ஏற்பட்ட அஷ்ர∴பின் அகால மரணம் முஸ்லிம் அரசியல் இயங்கு நிலையில் சடுதியான மாற்றங்களை ஏற்படுத்தியது. அஷ்ர∴பின் மூலம் ஒன்று திரட்டப்பட்ட அரசியல் பிரமுகர்கள் பலர், அவர் உருவாக்கிய ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்து சென்றனர்; புதிய கட்சிகளை நிறுவிக் கொண்டனர்; சமூக அரசியலை சிறு பிராந்தியங்களுக்குள் வரையறுக்கும் போக்கு தீவிரப்படுத்தப்பட்டது. மொத்தத்தில் அஷ்ர∴புக்கு பிந்திய முஸ்லிம் சமூக அரசியல் பல துண்டங்களாக உடைந்துள்ளதுடன் முஸ்லிம்களின் எதிர்கால அரசியல் இருப்பினையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

இவ்விதம் முஸ்லிம் தனித்தேசிய அரசியல் என்று வருகிற போது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸினையும் அக்கட்சியின் ஸ்தாபகர் அஷ்ர∴பினையும் மறந்துவிட முடியாது. அஷ்ர∴பின் காலத்தில் முஸ்லிம் தேசிய அரசியல் போக்கில் துரித வளர்ச்சியினைக் கண்ட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அவரது மறைவிற்குப் பின்னர் பல தொய்வுகளுடன் பயணிக்க வேண்டியுள்ளது. இப்பின்புலத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற, முஸ்லிம் அரசியல்

இயக்கம் சமகாலத்தில் எதிர்கொள்கிற முக்கிய தொய்வுகளையும் அதிலிருந்து மீள்வதற்கு அவசியமான சில சீர்திருத்தங்களையும் இக்கட்டுரை அலசுகிறது.

இக்கட்டுரைக்கான பின்புலத் தரவுகள் முன்னர் எழுதி வெளியிடப்பட்ட பல கட்டுரைகளிலிருந்தும் நூல்களிலிருந்தும் பெறப்பட்டுள்ளன. கட்டுரையில் அடையாளம் காணப்பட்டுள்ள ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சமகாலத்தில் எதிர்கொள்ளும் தொய்வுகளும் சீர்திருத்தங்களும் கற்பனையில் வரையப்பட்டதல்ல. அக்கட்சி தொடர்பாக புலமையாளர்களிடமும் மக்கள் பிரதிநிதிகளிடமும் கட்சிச் செயற்பாட்டாளர்களிடமும் கட்சித் தொண்டர்களிமிடமும் காணப்படும் பொதுவான அபிப்பிராயங்களை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்டவையாகும்.

## 2. முஸ்லிம் அரசியல்

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் வரலாறு அறிஞர் சித்திலெப்பையுடன் ஆரம்பிக்கிறது. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் அறிஞர் சித்திலெப்பை ஆரம்பித்து வைத்த 'இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கமும்' அவர் வெளியிட்ட 'முஸ்லிம் நேசன்' பத்திரிகையும் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் கலாசார மறுமலர்ச்சியுடன் அரசியல் பிரக்ஞையினையும் ஏற்படுத்தியது. அவர் 1886.09.08 ஆம் திகதி வெளியிட்ட முஸ்லிம் நேசன் இதழொன்றில் ''இந்நாட்டில் இரண்டு இலட்சம் முஸ்லிம்கள் வாழ்கின்றனர். ஆனால் அவர்களுக்கு சட்டவாக்க சபையில் பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை. முஸ்லிம்களை விடவும் எண்ணிக்கையில் குறைவான பறங்கியர்களும் கோப்பி உற்பத்தியாளர்களும் சட்டவாக்க சபையில் பிரதிநிதித்துவத்தினைக் கொண்டுள்ளனர்'' (Nuhman, 2007) என்று குறிப்பிட்டார்.

இந்நிலையில் பிரித்தானியர் 1889 இல் சட்டவாக்க சபையின் உறுப்பினர் எண்ணிக்கையினை விஷ்தரித்ததுடன் முஸ்லிம்களுக்கும் பிரதிநிதித்துவத்தினை வழங்கினர். இதன் போது முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் அறிஞர் சித்திலெப்பைக்கு வழங்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்புக்கள் நிலவிய போதிலும் எம்.சீ.அப்துல் ரஹ்மான் என்பவரே முதல் முஸ்லிம் சட்டவாக்க சபை உறுப்பினராக நியமனம் பெற்றார். இவர் இந்தியாவில் பிறந்த ஒருவராகையினால் அவரது நியமனம் தொடர்பில் இலங்கை முஸ்லிம்கள் திருப்தி காணவில்லை. அவரைத் தொடர்ந்து வந்த காலங்களில் ஏ.எம்.ஷரீப், டபிள்யு எம்.அப்துல் ரஹ்மான், என்.எச்.எம்.அப்துல் காதர், ஈ.ஜீ.ஆதமலி, எச்.எம்.மாக்கான் மாக்கார், டீ.பீ.ஜாயா, எஸ்.ஆர்.சுல்தான் முதலியவர்கள் பிரித்தானியர்கால சட்டவாக்க சபையின் உறுப்பினர்களாக நியமனம் பெற்றனர் (Fowsar, 2013).

சுதந்திரத்திற்குப் பின்னர் முஸ்லிம்களின் அரசியல், பிரதேச ரீதியான பிளவினைக் கொண்டிருந்தது. இதன்படி வடக்கு, கிழக்கில் வாழ்ந்த சில முஸ்லிம்கள் தமிழ் தேசிய அரசியலுடன் இணைந்து தமது அரசியல் பயணத்தினை ஆரம்பித்தனர். வடக்கு, கிழக்கிற்கு வெளியே வாழ்ந்த பலர் தேசியக் கட்சிகளுடன் இணைந்து அரசியல் செய்தனர். 1947 இல் இடம்பெற்ற சுதந்திர இலங்கையின் முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் ஏ.ஆர்.எம்.அபூபக்கர், ஏ.எல்.சின்னலெப்பை, எம்.எஸ். காரியப்பர், எம்.எம்.இப்றாஹிம் ஆகிய நான்கு முஸ்லிம்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுள் மூவர் முஸ்லிம்கள் செறிந்து வாழும் கிழக்கு மாகாணத்தின் மூன்று தொகுதிகளிலிருந்து (மூதூர், கல்முனை, மட்டக்களப்பு) தெரிவு செய்யப்பட்டனர். இதன் பின்னர் இடம்பெற்ற தேர்தல்களிலும் முஸ்லிம்கள் பலர் போட்டியிட்டு வெற்றி பெற்றனர். இவர்களுள் சேர் ராசீக் பரீட், ரீ.பி.ஜாயா, பதியுதீன் மஹ்மூத், கலீல் இஸ்ஹாக், எம்.எச்.முஹம்மட், எம்.ஈ.எச்.மஹ்ரூப், பீ.ஏ.மஜீட், ஏ.ஆர்.எம். மன்சூர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்களாவர் (Fowsar, 2013).

ஆரம்பத்தில் முஸ்லிம்களை இயக்கரீதியாக ஒன்றிணைப்பதில் 'முஸ்லீம் லீக்' முக்கிய பங்காற்றியது. ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்பட்ட இவ்வமைப்பு, டீ.பி. ஜாயா, எம்.சீ.எம்.கலீல், ஏ.எம்.ஏ.அஸீஸ் முதலானவர்களின் பங்களிப்புடன் தீவிரமாகச் செயற்பட்டது. அதேபோன்று, 1960 களில் எம்.எஸ்.காரியப்பர் உருவாக்கிய 'அகில இலங்கை இஸ்லாமிய ஐக்கிய முன்னணி' என்ற அமைப்பும் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வமைப்பு முஸ்லிம் அரசியலில் பாரிய பங்களிப்புக்கள் எதனையும் செய்திருக்கவில்லை. இக்காலத்தில் பதியுதீன் மஹ்மூதினால் உருவாக்கப்பட்ட 'இஸ்லாமிய சோசலிச முன்னணி' என்றதொரு அமைப்பும் செயற்பட்டது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்பட்ட, இவ்வமைப்புக்கு எதிராக 'சோசலிச எதிர்ப்பு

முன்னணி' என்றதொரு இயக்கம் ஐக்கிய தேசியக் கட்சியினைச் சேர்ந்த எம்.எச்.முஹம்மட் என்பவரால் உருவாக்கப்பட்டது (Fazil, 2016).

வடக்கு கிழக்கில் இனத்துவ அரசியல் கூர்மையடைந்து கொண்டிருந்த காலப்பகுதியில் 'முஸ்லிம் ஐக்கிய முன்னணி' என்றதொரு அரசியல் கட்சி உருவாக்கப்பட்டது. இக்கட்சியில் அஷ்ர.ஃப் முக்கிய பேச்சாளராகவும் கொள்கை விளக்க உரையாளராகவும் செயற்பட்டார். இதனால் அஷ்ர.ஃப் முஸ்லிம் ஐக்கிய முன்னணியின் 'மூளை வங்கி' என அழைக்கப்பட்டார். 1977 இல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் இக்கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து போட்டியிட்டது. இக்கட்சி சார்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியில் பலர் போட்டியிட்டபோதிலும் தேர்தலில் அவர்களால் வெற்றிபெற முடியவில்லை (Cader, 2002). இதன் பின்னர் இலங்கை அரசியலில் ஏற்பட்ட தளம்பல்கள், குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உருவாகிய அசாதாரண சூழ்நிலை முஸ்லிம் அரசியல் இயங்கு நிலையினை புதிய திசையினை நோக்கி நகர்த்தியது. இப்புதிய நகர்வுக்கு அஷ்ர.ஃபும் அவரது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசும் தலைமைத்துவம் வழங்கியது.

## 3. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்

கிழக்கிலங்கையில் ஒரு சமூக நலன்புரி அமைப்பாக உருவாகிய ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸினை ஒரு பெரும் அரசியல் சக்தியாக வளர்த்தெடுத்தவர் எம்.எச்.எம்.அஷ்ர.ஃப் என்ற வழக்கறிஞர். ஆரம்பத்தில் அஷ்ர.ஃபின் அரசியல், தமிழ் தேசிய அரசியலுடன் இணைந்திருந்தது. அவரிடம் இருந்த தமிழ் தேசிய உணர்வலைகள், சமஷ்டிக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வீ.செல்வநாயகத்துடனான ஈடுபாடு முதலியன தமிழ் தேசிய அரசியலுக்கும் அஷ்ர.ஃபுக்குமிடையிலான ஒரு இணைப்புப் பாலமாக செயற்பட்டன. செல்வநாயகத்திற்குப் பின்னர் தமிழ் தேசிய அரசியலை நெறிப்படுத்திய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அப்பாத்துறை அமிர்தலிங்கத்துடனும் அஷ்ர.ஃபுக்கு நல்லுறவு இருந்தது.

அஷ்ர.ஃபின் தமிழ் தேசிய அரசியல் ஈடுபாட்டுடன் 1977 இல் முஸ்லிம் ஐக்கிய முன்னணியானது அமிர்தலிங்கத்தின் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் தேர்தல் கூட்டியினை ஏற்படுத்தியிருந்தது. எனினும் 1977 இல் இடம்பெற்ற பாராளுமன்றப் (தேசிய அரசுப் பேரவை) பொதுத் தேர்தலில் அக்கூட்டணி சார்பாக அஷ்ர.ஃப் போட்டியிடவில்லை. மாறாக அஷ்ர.ஃப் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் மேடைகளில் முக்கிய பிரச்சாரகராகக் கலந்துகொ ண்டார். கூட்டணியின் தேர்தல் மேடைகளில் "அண்ணன் அமிர்தலிங்கம் தமிழீழத்தைப் பெற்றுத்தராவிட்டால் தம்பி அஷ்ர.ஃப் பெற்றுத்தருவான்" என அஷ்ர.ஃப் முழங்கினார் (Ismail, Abdullah & Fazil, 2004).

இதனையடுத்து 1981 இல் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலிலும் முஸ்லிம் ஐக்கிய முன்னணி தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து போட்டியிட்டது. மேற்குறிப்பிட்ட இரண்டு தேர்தல்களிலும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பங்காளிக் கட்சியான முஸ்லிம் ஐக்கிய முன்னணி தோல்வி கண்டது. இத்தோல்வியிலிருந்து அஷ்ர.ஃப் பல பாடங்களைக் கற்றுக்கொண்டார்; தமக்கான தெளிவான அரசியல் பாதையொன்றினை வகுத்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தினைப் புரிந்துகொண்டார்.

1980 களுக்குப் பின்னர் தமிழர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள், தமிழ் ஆயுதக் குழுக்களின் தோற்றத்திற்கு வழிவகுத்ததுடன் தமிழ் தேசிய அரசியலை ஆயுத வன்முறைக்குள் சிக்கவைத்தது. இவ்விதம் இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் ஆயுதமயப்பட்டிருந்த சூழலில் முஸ்லிம்களின் இருப்பும் எதிர்காலமும் குறித்து பலமான கேள்விகள் எழுந்திருந்தன. தமிழ் போராட்ட இயக்கங்களில் முஸ்லிம் இளைஞர்கள் பலர் இணைந்திருந்த போதிலும் அவ்வியக்கங்களின் அரசியல் வேலைத் திட்டங்களில் முஸ்லிம் நலன் புறக்கணிக்கப்பட்டிருந்தது. இதனால் முஸ்லிம் இளைஞர்கள் பலர் தமிழ் போராட்ட அமைப்புக்களில் நம்பிக்கையற்றிருந்தனர். அதேவேளை, அரச படைகளும் தமிழ் ஆயுதக் குழுக்களை கட்டுப்படுத்துவதற்கு முஸ்லிம் இளைஞர்களை கேடயமாகப் பயன்படுத்தின.

இவ்விதம் உருவாகிய ஆயுதக் கலாசாரத்தின் நீட்சியினால் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்த தமிழ் - முஸ்லிம் மக்களின் உறவு வெகுவாகப் பாதிப்புற்றது; இரு சமூகங்களுக்கிடையிலும் அச்சமும் பகைமையும் கசப்புணர்வுகளும் வளர்ந்தன; இலங்கைத் தமிழர்கள் போன்று முஸ்லிம்களும் அன்றாடம் இழப்பீடுகளை சந்தித்தனர்; முஸ்லிம்களின்

பாதுகாப்புக் கேள்விக்குறியானது; முஸ்லிம் இளைஞர்கள் விரக்தியுற்றிருந்தனர்; தேசியக் கட்சிகளை பிரதிநிதித்துவம் செய்த முஸ்லிம் தலைவர்கள் மீதான மக்கள் அபிமானம் வெகுவாகக் குறைந்திருந்தது. இவ்வாறாக 1980 களுக்குப் பிறகு இலங்கையில் உருவாகிய அசாதாரண சூழ்நிலை முஸ்லிம் அரசியல் அடையாளத்தினை உருவாக்குவதற்கான தேவையினை ஏற்படுத்தியது. இதனை நன்குணர்ந்திருந்த அஷ்ர∴ப் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தினை மிகக் கச்சிதமாகப் பயன்படுத்திக் கொண்டார்.

அரசியல் ரீதியாக சமஷ்டிக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, முஸ்லிம் ஐக்கிய முன்னணி என அகலக் கால்பதித்திருந்த அஷ்ர∴பின் அரசியல், 1980 களுக்கு பிறகு புதிய திசையில் பயணிக்க ஆரம்பித்தது. அவரது அரசியல் பயணம் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் (SLMC) என்ற அரசியல் இயக்கத்தின் மூலம் நிறுவனமயப்படுத்தப்பட்டது. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் 1981 இல் தாபிக்கப்பட்ட போதிலும் 1988 ஆம் ஆண்டே அதுவொரு உத்தியோகபூர்வ அரசியல் கட்சியாக அறிவிக்கப்பட்டது (Abdullah, 2016). இக்கட்சி தாபிக்கப்பட்டதும் முஸ்லிம் நலவுரிமைக்காக குரல்கொடுத்ததுடன் இஸ்லாமிய அரசியல் கருத்தியலை முன்னிறுத்தி மக்கள் ஆதரவினைத் திரட்டியது; தமிழ் தேசிய அரசியலிருந்து முஸ்லிம் தேசிய அரசியலை மீட்டெடுத்தது; தேசியக் கட்சிகளில் அடைக்கலம் புகுந்திருந்த முஸ்லிம் தலைவர்களுக்கு மிகப்பெரும் சவாலை அக்கட்சி ஏற்படுத்தியது.

இவ்விதம் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் தோற்றத்திற்கும் மிக நெருங்கிய தொடர்பு இருந்த போதிலும், முஸ்லிம் அரசியல் விடுதலைக்காக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆயுதப் போராட்டத்தினை அன்றி, பாராளுமன்ற அரசியல் பிரவேசத்தினையே தெரிவு செய்தது. இதற்கான மக்கள் தளத்தினை அக்கட்சி தயார் செய்ததுடன் இஸ்லாமியவாதக் கருத்துக்களை பிரதான சுலோகமாகக் கொண்டு செயற்பட்டது. இதன்படி அஷ்ர∴ப் முஸ்லிம் காங்கிரசின் பிரச்சார மேடைகளில் ''லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் (இறைவன் ஒருவனே. முஹம்மது (ஸல்) அவர்கள் இறைவனின் திருத்தூதர் ஆவார்.)'' என்ற இஸ்லாமிய மூலமந்திரத்தை ஒலித்தார்; அல்-குர்ஆன், அல்-ஹதீஸ் ஆகிய இஸ்லாமிய மூலாதாரங்களையும் வழிமுறைகளையும் கட்சியின் மூலாதாரங்களாகவும் வழிமுறையாகவும் பிரகடனம் செய்தார்; முஸ்லிம் பள்ளிவாயல்களை தளமாகப் பயன்படுத்தினார். இறுதியில் அஷ்ர∴ப் முன்வைத்த கருத்துக்களும் அவரது பேச்சாற்றலும் அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் நலிவடைந்திருந்த வடக்கு - கிழக்கு முஸ்லிம்களை வெகுவாகக் கவர்ந்தன (Imtiyaz, 2007).

முஸ்லிம் காங்கிரஸ் அதன் ஆரம்ப நாட்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கெடுபிடிகளை சந்திக்க நேர்ந்தது; புலிகளின் கொலைப்பட்டியலுக்குள் அக்கட்சியின் தலைவர் அஷ்ர∴ப் உள்வாங்கப்பட்டார்; கட்சியின் சில போராளிகள் புலிகளால் கொல்லப்பட்டனர்; பல போராளிகள் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்டனர். இத்தனை கெடுபிடிகளுக்குள்ளும் முஸ்லிம் தேசிய அரசியலை வளர்த்தெடுப்பதற்கு அஷ்ர∴பும் அவரது கட்சியும் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டது. இதற்கமைய ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் முதன்முறையாக 1988 இல் இடம்பெற்ற இணைந்த வடக்கு கிழக்கிற்கான மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டது. இத்தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் 17 ஆசனங்களைக் கைப்பற்றியதுடன் இணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபையில் எதிர்க் கட்சி அந்தஸ்த்தினைப் பெற்றுக் கொண்டது (Fowsar, 2016).

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பதிவு செய்யப்பட்ட ஒரு அரசியல் கட்சி என்றவகையில் 1989 இலேயே முதலாவது பாராளுமன்றத் தேர்தலை சந்தித்தது. இத்தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் நான்கு பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தினைப் பெற்றுக்கொண்டது. கட்சியின் தலைவர் அஷ்ர∴ப் திகாமடுல்ல (அம்பாரை) தேர்தல் மாவட்டத்தில் கணிசமான வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்பட்டார். கூடவே மட்டக்களப்பு, வன்னி ஆகிய தேர்தல் மாவட்டங்களிலும் முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது. இவ்வெற்றியின் மூலம் தேசிய அரசியலுக்குள் நுழைந்த முஸ்லிம் காங்கிரஸ் சிறுபான்மை சமூகங்களுக்காக பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் குரல் கொடுத்தது (Jameel, 2012).

அஷ்ர∴ப் பாராளுமன்றத்தில் இருக்கும் போதே வடக்கிலிருந்து பல்லாயிரக்கணக்கான முஸ்லிம் மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளினால் வெளியேற்றப்பட்டு, இனச்சுத்திகரிப்புச் செய்யப் பட்டனர். அவர்களது சொத்துக்கள் சூறையாடப்பட்டன. காத்தான்குடி, ஏறாவூர் உள்ளிட்ட

இடங்களிலுள்ள பள்ளிவாசல்களில் தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். 1990 இல் ஹஜ் கடமையினை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய முஸ்லிம் யாத்திரிகர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இவ்விதம் தமிழீழ விடுதலைப் புலிகளினால் வடக்கு, கிழக்கில் வாழ்ந்த முஸ்லிம்கள் பல்வேறு துயரங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது (Fazil, 2004). இதன்போதெல்லாம் அஷ்ர.்.ப் முஸ்லிம்கள் சார்பாக பாராளுமன்றத்தில் குரல் கொடுத்தார். ஒரு கட்டத்தில் அஷ்ர.்.ப் பாராளுமன்றத்தில் பேசும்போது: ''நாம் முஸ்லிம்களாக இருப்பதற்காக, 'லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸுலுல்லாஹ்' என்ற கலிமாவினை மொழிந்ததற்காக, அல்லாஹ்வையும் நபி முஹம்மது (ஸல்) அவர்களையும் நம்பிக்கை கொண்டதற்காக, விடுதலைப் புலிகள் எங்களைக் கொல்கின்றனர்; எங்கள் வீடுகளை விட்டும் விரட்டுகின்றனர். இதனால் நாம் அவர்களுக்கு எதிராக ஜிஹாதினை (அறப்போரினை)ப் பிரகடனம் செய்ய வேண்டும்'' என்று கூறினார் (Imtiyaz, 2007).

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசினைப் பொறுத்தவரையில் 1994 இல் இடம்பெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் ஆகிய இரண்டும் முக்கியமானவைகளாகும். இவ்விரு தேர்தல்களிலும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியினை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரித்தது. 1994 இல் இடம்பெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் 07 ஆசனங்களைக் கைப்பற்றியதுடன் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினை அமைப்பதற்கு ஆதரவு நல்கியது. இதன்போது அமைக்கப்பட்ட அரசாங்கத்தில் அஷ்ர.்.ப் கப்பல்துறை, புனர்வாழ்வு, புனரமைப்பு ஆகிய முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களைப் பெற்றுக்கொண்டார். அவரது கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு பிரதி அமைச்சுப் பொறுப்புக்களும் வழங்கப்பட்டன. அதேயாண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் சந்திரிகாவினை ஆதரித்து அஷ்ர.்.ப் பிரச்சாரம் செய்தார். இறுதியில் கணிசமான வாக்குகளைப் பெற்று சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார் (Jameel, 2012).

இவ்விதம் 1994 இல் நிறுவப்பட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் முஸ்லிம் காங்கிரஸ் பிரதான பங்காளிக் கட்சியாகச் செயற்பட்டது. இக்காலம் முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் வரலாற்றில் ஒரு பொற்காலமாகும். காங்கிரஸின் தலைவர் அஷ்ர.்.ப் அரசாங்கத்தில் தனக்கிருந்த பலத்தினை பயன்படுத்தி பேரம்பேசலில் ஈடுபட்டதுடன் சமூக, பொருளாதார ரீதியாக நலிவடைந்திருந்த வடக்கு, கிழக்கு வாழ் மக்களின் மேம்பாட்டிற்காக மிகக் கடுமையாக உழைத் தார். சமூக அரசியலையும் கட்சி அரசியலையும் வளர்த்துக் கொள்வதற்கு அஷ்ர.்.ப் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தினை மிகக் கச்சிதமாகப் பயன்படுத்தினார். அஷ்ர.்.ப் மீண்டும் 1999 இல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி சந்திரிகாவின் வெற்றிக்காக உழைத்து அதிலும் வெற்றி கண்டார்.

இவ்வாறாக அஷ்ர.்.பின் தலைமைத்துவத்தின் கீழ் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை அரசியலில் சிங்கள பௌத்த - தமிழ் இன மையக் கருத்தாடல்கள் மேற்கிளம்பிய போது முஸ்லிம் கருத்தாடல் குறித்த பிரக்ஞையை ஏற்படுத்தியது; விரக்தியிலிருந்த முஸ்லிம் இளைஞர்கள் வன்முறைக்கு செல்வதைத் தடுத்து நிறுத்தியது; அரசியல் அரங்கில் முஸ்லிம் நலவுரிமை தொடர்பாக குரல் கொடுக்கும் ஒரு பெரும் அரசியல் சக்தியாகத் தொழிற்பட்டது; முஸ்லிம்களை மத, கலாசார ரீதியாக ஒன்று திரட்டியதுடன் முஸ்லிம்களின் இன அடையாளத்தினை மீள நிலைநிறுத்தியது; கொழும்பினை மையப்படுத்தியிருந்த முஸ்லிம் அரசியலை கிழக்கு நோக்கித் திருப்பியது; முஸ்லிம் மக்களை அரசியல்மயப்படுத்துவதில் பெரு வெற்றி கண்டது; வடக்கு, கிழக்கில் வேலைவாய்ப்பின்றி இருந்த பல நூறு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொடுத்தது; முஸ்லிம்களின் உயர் கல்வி வாய்ப்பினை அதிகரிக்கும் நோக்கில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தினை உருவாக்க முயற்சி எடுத்தது. இவ்வாறாக முஸ்லிம் அரசியலில் அஷ்ர.்.பின் காலம் பொற்காலம் என்று கூறுமளவிற்கு அவரும் அவரது கட்சியும் முஸ்லிம் நலவுரிமைக்காக என்றும் குரல்கொடுத்தனர்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியலில் 2000.09.16 ஆம் திகதி நிகழ்ந்த விமான விபத்து துரதிஷ்டவசமானது. இவ்விபத்தில் முஸ்லிம்களின் ஒப்பற்ற அரசியல் இயக்கமாக விளங்கிய ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ர.்.ப் அகால மரணமடைந்தார். இக்காலம் இலங்கையில் பாராளுமன்ற தேர்தலுக்கான பரப்புரைகள் இடம்பெற்ற காலம். தேர்தலில் போட்டியிடும் ஒரு வேட்பாளராக நின்று, பிரச்சாரத்திற்கு புறப்பட்டுச் செல்லும்வேளையிலேயே அஷ்ர.்.பின் இறப்பு நிகழ்ந்தது. அஷ்ரபின் வேட்பாளர் வெற்றிடம்

அவரது மனைவி பேரியல் அஷ்ரஃபினைக் கொண்டு நிரப்பப்பட்டது. குறித்த தேர்தலில் அஷ்ரஃப் உருவாக்கிய கூட்டணியின் ஊடாக திகாமடுல்ல (அம்பாரை) தேர்தல் மாவட்டத்தில் பெற்றுக் கொண்ட 04 ஆசனங்களுடன் மொத்தமாக 11 பாராளுமன்ற ஆசனங்களை காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி பெற்றுக் கொண்டது. இத்தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் கூட்டணி அமைத்துச் செயற்பட்டதுடன், நாட்டின் சில இடங்களில் தேசிய ஐக்கிய முன்னணி என்ற பெயரில் தனித்தும் போட்டியிட்டது (Jameel, 2012). இதன் பின்னர் காங்கிரஸில் ஏற்பட்ட உள்ளக நெருக்கடிகள் கட்சி பல துண்டங்களாக பிளவுபடுவதற்கும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் ரவூப் ஹக்கீமிடம் சென்றடைவதற்கும் வழிவகுத்தன.

2000 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை சுமார் 19 வருடங்களாக ரவூப் ஹக்கீம் காங்கிரஸின் தலைவராக செயற்பட்டுவருகின்றார். இடைக்கிடையே உட்கட்சிப் பிளவுகளால் சிதறுண்டு போன காங்கிரஸ், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் 'பெருந்தலைவர் அஷ்ரஃபின் கட்சி' எனும் காரணி யினைப் முதன்மைப்படுத்தி கட்சியின் இருப்பினைப் பாதுகாத்துள்ளது. 2001 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைத்துச் செயற்பட்டு வரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தற்போதைய (2019) அரசாங்கத்தின் முக்கிய பங்காளிக் கட்சியாகச் செயற்பட்டு வருகிறது. இவ்வரசாங்கத்தில் காங்கிரஸின் தலைவர் நகர திட்டமிடல், நீர் வழங்கல், உயர் கல்வி உள்ளிட்ட முக்கிய கபினட் அமைச்சுப் பொறுப்புக்களைப் பெற்றுள்ளதுடன் அக்கட்சியின் ஏனைய மூன்று உறுப்பினர்கள் இராஜாங்க அமைச்சர்களாக உள்ளனர். அவர்களுள் இருவர் அம்பாறை மாவட்டத்தினையும் ஒருவர் மட்டக்களப்பு மாவட்டத்தினையும் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் சமகாலத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தொடர்பிலும் அதன் வேலைத் திட்டங்கள் தொடர்பிலும் பரவலான குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

## 4. கட்சிப் பிளவுகள்

அஷ்ரஃபுக்குப் பிந்திய முஸ்லிம் காங்கிரஸ் பல துண்டங்களாக பிளவுற்றுள்ளது. முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் அஷ்ரஃப் மரணித்த பின்னர் முஸ்லிம் காங்கிரஸில் உருவாகிய தலைமைத்துவ வெற்றிடம், அக்கட்சி துரிதகதியில் சிதறுண்டு போவதற்கு வழிவகுத்தது. இதன்படி முஸ்லிம் காங்கிரஸில் ஹக்கீமின் தலைமைத்துவத்தினை விரும்பாதவர்கள் அஷ்ரஃபின் பாரியார் பேரியல் அஷ்ரஃபின் தலைமையில் 'தேசிய ஐக்கிய முன்னணி'யினை பலப்படுத்திச் செயற்பட்டனர். தேசிய ஐக்கிய முன்னணி அஷ்ரஃப் மரணிப்பதற்கு முன்னரே உருவாக்கப் பட்டிருந்த போதிலும், அக்கட்சி அஷ்ரஃபின் மரணத்திற்குப் பின்னர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதிருப்தியாளர்களைக் கொண்டு தனியாகச் செயற்படக்கூடிய ஒரு கட்சியாக மாறியது. அஷ்ரஃபின் பாரியார் பேரியல் அஷ்ரஃப் தலைமையில் செயற்பட்ட இக்கட்சி, 2000 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரை பாராளுமன்ற அரசியலில் முழு வீச்சுடன் செயற்பட்டது (Fazil, 2009). இக்காலப் பகுதியில் தேசிய ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாக செயற்பட்டதுடன் கட்சியின் தலைவியான பேரியல் அஷ்ரஃப் கபினட் அமைச்சுப் பொறுப்பினையும் பெற்றிருந்தார். 2010 இல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் தேசிய ஐக்கிய முன்னணி அடைந்த தோல்வி அக்கட்சியினை வீழ்ச்சியுறச் செய்தது. இக்கட்சியின் செயற்பாடுகள் ஸ்தம்பித்துப் போன நிலையில் 2012 இல் இலங்கை தேர்தல் திணைக்களம் கட்சியின் பதிவினை இரத்துச் செய்தமை குறிப்பிடத்தக்கது (Bandara, 2012).

2002 இல் இடம்பெற்ற யுத்தநிறுத்த காலப்பகுதியில் முஸ்லிம் காங்கிரஸ் மற்றுமொரு முக்கிய பிளவினை எதிர்கொண்டது. இதன்படி அதாவுல்லா தலைமையிலான கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் சிலர் காங்கிரஸில் இருந்து வெளியேறி 'அஷ்ரஃப் காங்கிரஸ்' என்ற புதியதொரு கட்சியினைத் தாபித்தனர். அஷ்ரஃப் காங்கிரஸ் 'தேசிய முஸ்லிம் காங்கிரஸ்' எனவும் பின்னர் 'தேசிய காங்கிரஸ்' எனவும் பெயர் மாற்றப்பட்டது (Fazil, 2009). இவ்வெளியேற்றத்தின்போது அம்பாரை மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸினைப் பிரதிநிதித்துவம் செய்த எச்.எம்.எம்.ஹரீஸ், அன்வர் இஸ்மாயில் ஆகியோர் அதாவுல்லாஹ்வுடன் கைகோர்த்துச் செயற்பட்டனர். தேசிய காங்கிரஸ் உருவாகிய நாட்களில் அம்பாரை மாவட்டத்தில் காங்கிசுக்கு சவாலை ஏற்படுத்தியபோதிலும் மிகக்குறுகிய காலத்திற்குள் அக்கட்சி பிளவுகளை சந்தித்தது. இக்கட்சியின் தலைவர் ஏ.எல்.எம்.அதாவுல்லா 2004 இலிருந்து 2015 வரை அரசாங்கத்தின் முக்கிய பங்காளியாக இருந்ததுடன் கபினட் அமைச்சராகவும் செயற்பட்டார். எனினும் 2015 இல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் அதாவுல்லா தோல்வியுற்றமை தேசிய காங்கிரஸினை மேலும் பலமிழக்கச் செய்துள்ளது.

*2004 இல் அல் ஹாபில் நசீர் அஹமட் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து வெளியேறி 'ஜனநாயக ஐக்கிய முன்னணி' என்ற ஒரு புதிய கட்சியினைத் தாபித்தார்* (Busto, 2007). *இக்கட்சி தேசிய அரசியலில் சோபிக்கவில்லையாயினும் உள்ளூர் அரசியலில் மிகச் சிறிய அளவிலான வாக்கினைக் கொண்டு செயற்பட்டது. தற்சமயம் ஜனநாயக ஐக்கிய முன்னணியின் தலைவர் நசீர் அஹமட் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்துள்ளதுடன் அக்கட்சியின் சார்பாக கிழக்கு மாகாண முதலமைச்சராகவும் குறிப்பிட்ட காலம் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. அதேபோன்று, மௌலவி முபாரக் அப்துல் மஜீத் காங்கிரஸிலிருந்து வெளியேறி உலமாக் கட்சி எனும் பெயரில் ஒரு கட்சியினை உருவாக்கினார்* (Busto, 2007). *இக்கட்சி தேசிய அரசியலிலோ உள்ளூர் அரசியலிலோ சோபிக்கவில்லை.*

*2004 இல் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஏற்படுத்திக் கொண்ட தேர்தல் கூட்டணியினை விரும்பாத காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர், காங்கிரஸிலிருந்து வெளியேற்றப்பட்டனர். இவ்வாறு வெளியேற்றப்பட்டவர்கள் 2005 இல் றிஷாட் பதியுத்தீன் தலைமையில் 'அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ்' என்ற கட்சியினை உருவாக்கினர். பின்னர் இக்கட்சி 'அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்' என்ற பெயரில் தொழிற்பட்டு வருகிறது. பொருளாதார பலம் பொருந்திய மக்கள் காங்கிரசின் தலைவர் றிஷாட் பதியுத்தீன் வடக்கு மாகாணத்தினைச் சேர்ந்தவர். வடக்கு முஸ்லிம்களின் அபிவிருத்தி மற்றும் அரசியலில் அகில இலங்கை மக்கள் காங்கிரசுக்கு குறிப்பிடும்படியான ஒரு இடமுண்டு. மிக அண்மைக்காலத்தில் கிழக்கு உள்ளடங்லான நாட்டின் ஏனைய பகுதிகளிலும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் செல்வாக்குச் செலுத்திவருகிறது. தொடர்ச்சியாக அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாக செயற் பட்டுவரும் மக்கள் காங்கிரஸ், அமைச்சரவையிலும் இடம்பிடித்துள்ளது.*

*மிக அண்மைய ஆண்டுகளில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மிகப்பெரிய பிளவினைச் சந்தித்தது. முன்னர் கட்சி பல துண்டங்களாக சிதறுண்டபோது கட்சிக்காக குரல்கொடுத்த கட்சியின் செயலாளர் நாயகம் ஹஸன் அலியும் தவிசாளர் பஸீர் சேகுதாவூதும் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. கட்சிக்கு கிடைத்த தேசியப் பட்டியல் ஆசனத் தினை பங்கீடு செய்தல், செயலாளரின் அதிகாரக் குறைப்பு முதலிய சர்ச்சைகளுடன் இவ்வெ ளியேற்றம் இடம்பெற்றது. இவர்களது வெளியேற்றத்தின் மூலம் கட்சியில் சில தொய்வுகள் உருவான போதிலும் காங்கிரசுக்கு இருக்கும் மக்கள் செல்வாக்கினால் மீண்டும் காங்கிரஸ் தலைநிமிர்ந்துள்ளது. காங்கிரஸிலிருந்து வெளியேற்றப்பட்ட செயலாளர் நாயகமும் தவிசாளரும் இணைந்து 'ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு' என்ற பெயரில் செயற்பட்டு வருகின்றனர். 2018 இல் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு றிஷாட் பதியுத்தீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரசுடன் கூட்டணி அமைத்துச் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.*

*மேற்குறிப்பிட்ட பிளவுகள் தவிர்ந்த கட்சியின் உள்ளூர் அரசியல் பிரமுகர்கள் பலரும் கட்சி தாவுகின்ற நிலை அவ்வப்போது இடம்பெற்று வருகின்றது. மொத்தத்தில் அஷ்ர∴புக்குப் பிந்திய ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் இயங்குநிலை, தொடர் பிளவுகளை சுற்றியே அமைந்துள்ளது. இருப்பினும் முஸ்லிம் காங்கிரஸில் இடம்பெற்ற உடைவுகளுக்கு மத்தியிலும் சில புதிய வரவுகளும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. காங்கிரஸிலிருந்து வெளியேறிய சிலர் மீண்டும் காங்கிரஸில் இணைந்து கொள்வதனை அவதானிக்க முடிகிறது. இதன் மூலம் முஸ்லிம் காங்கிரஸ் எதிர்கொண்ட இழப்பீடுகளை குறிப்பிட்டளவு நிவர்த்தி செய்யக் கூடியதாகவும் இருக்கிறது. கட்சி என்ற அடிப்படையில் காங்கிரஸ் சந்தித்த பிளவுகள் அதன் ஒருமைப் பாட்டிற்கும் ஐக்கியத்திற்கும் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ள அதேநேரம், முஸ்லிம் சமூக அரசியல் சிதைவுறுவதற்கும் காரணமாக அமைந்துள்ளது.*

## 5. சமகாலத் தொய்வுகள்

*அஷ்ர∴பின் மரணத்திற்குப் பின்னர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்து வருகிறது. கட்சியின் தலைமைத்துவத்தில் தொடங்கி கட்சியின் சாதாரண தொண்டன் வரை சகல மட்டங்களிலும் பல்வேறு தொய்வுகள் காணப்படுகின்றன. அத்தொய்வுகள் கட்சியின் வளர்ச்சியினைப் பாதித்துள்ள அதேவேளை, தேசிய அரசியலில் முஸ்லிம்களின் பலத்தினை சிதைவுறச் செய்துள்ளது. இந்தவகையில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சமகாலத்தில் எதிர் கொள்ளும் முக்கிய சில தொய்வுகளை பின்வருமாறு நோக்கலாம்:*

**1. தலைமைத்துவம் தொடர்பான விமர்சனங்கள்:** ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவம் தொடர்பாக பலத்த விமர்சனங்கள் நிலவுகின்றன. கட்சியின் அதிகாரங்கள் தலைமைத்துவத்திடம் குவிக்கப்பட்டுள்ள விடயம் கட்சியின் உள்ளக ஜனநாயகத்திற்கு மிகவும் ஆபத்தாக உள்ளது. தலைமைத்துவத்திற்கு சார்பான வகையில் கட்சியின் உயர்பீடம் கட்டமைக்கப்படுகிறது. தேர்தல்களில் வேட்பாளர்களை நிறுத்துதல், தேசியப் பட்டியல் ஆசனங்களை பங்கீடு செய்தல், அமைச்சுக்களைப் பெறுதல், அபிவிருத்தித் திட்டங்கள், வேலை வாய்ப்புக்கள் என்பவற்றிலும் தலைமைத்துவத்தின் ஆதிக்கம் மிகைத்துக் காணப்படுகிறது. தொடர்ச்சியான கொள்கை மறுசீர மைப்புக்களும் கட்சித் தலைமைத்துவத்தினைப் பாதுகாக்கும் வகையிலே அமைந்திருப்பதாக பரவலான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. இதனால் அஷ்ரஃபுக்குப் பிந்திய தசாப்தத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினை ஒன்றுபட்ட ஒரு சக்தியாக வளர்த்தெடுப்பதில் தற்போதைய தலைமைத்துவம் பலத்த சவால்களை எதிர்கொண்டுவருகிறது.

**2. பல கட்சிகளாக பிளவுபட்டுள்ளமை:** சமகாலத்தில் முஸ்லிம் காங்கிரஸ் எதிர்கொள்ளும் மிக முக்கிய நெருக்கடி, அக்கட்சி பல துண்டங்களாக பிளவுபடுகின்றமையாகும். கட்சிக்கு உள்ளேயும் வெளியேயும் ஏற்பட்டுள்ள தலைமைத்துவ / அதிகாரப் போட்டி முஸ்லிம் காங்கிரஸ் பல கட்சிகளாக பிளவுபடுவதனை துரிதப்படுத்தியுள்ளது. இதுவரை கட்சி ஆறு முக்கிய பிளவுகளைச் சந்தித்துள்ளது. மிக அண்மைய ஆண்டுகளில் கட்சியின் செயலாளர் நாயகம், தவிசாளர் உள்ளிட்டோரின் வெளியேற்றம் முஸ்லிம் காங்கிரஸ் சந்தித்த மிகப்பெரும் பிளவாகும். தேசிய அரசியல் நீரோட்டத்தில் செயற்படுகிற ஒரு கட்சி என்றவகையில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தொடர்ச்சியான பிளவினை சந்தித்துவருகின்றபோதிலும், இலங்கை முஸ்லிம் அரசியலில் அக்கட்சி குறிப்பிடும்படியான செல்வாக்கினை இன்னும் இழந்துவிடவில்லை. அக்கட்சியின் வாக்கு எண்ணிக்கையில் அவ்வப்போது ஏற்ற - இறக்கங்கள் ஏற்படுகின்றபோதிலும் ஒரு அரசியல் கட்சி என்றவகையில் தேசிய அரசியலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமக்குரிய பங்கினை ஓரளவுக்கேனும் நிலைநிறுத்தியுள்ளது.

**3. தொடர்ச்சியான உட்கட்சிப் பூசல்கள்:** ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸினை ஒன்றுபட்ட ஒரு அரசியல் இயக்கமாக முன்நகர்த்திச் செல்வதில் அக்கட்சிக்குள்ளே இருக்கும் பூசல்கள் மிகப்பெரும் தடையாக உள்ளன. கட்சியின் தலைவருக்கும் செயலாளருக்கும், தலைவருக்கும் தவிசாளருக்கும், தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும், கட்சியின் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனைய உறுப்பினர்களுக்கிடையில் என்றவாறு தொடர்ச்சியான உட்கட்சிப் பூசல்கள் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸில் வியாபகம் பெற்றுள்ளன. இப்பூசல்களே பல்வேறு சந்தர்ப்பங்களில் காங்கிரஸ் பல துண்டங்களாக பிளவுபடுவதற்கும் காரணமாக அமைந்தன. மிக அண்மைய காலங்களில் நிலவிய உட்கட்சிப் பூசல்கள் கட்சியின் வளர்ச்சிக்கு மிகப்பெரிய தடையாக அமைந்துள்ளன. உள்ளூர் மட்டங்களில் கட்சிக் கட்டுக்கோப்பு சிதைவுறுவதற்கும் ஆதரவாளர்கள் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து செல்வதற்கும் கட்சிக்குள்ளே இருக்கும் முரண்பாடுகள் காரணமாக அமைந்துள்ளன. சிலவேளைகளில், உட்கட்சிப் பூசல்களால் கட்சி உறுப்பினர்கள் ஒன்றுபட்டு, கூட்டாகச் செயற்பட வேண்டிய தருணங்களில் கூட ஒருவரை ஒருவர் விமர்சனம் செய்யக்கூடிய நிலை உருவாகிவிடுகிறது.

**4. முறையான ஒருங்கிணைப்பு இல்லாமை:** ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு அரசியல் கட்சி என்றவகையில், அக்கட்சி செயற்படுகின்ற பல்வேறு மட்டங்களுக்கிடையில் முறையான ஒருங்கிணைப்பு இல்லாமையினை தெளிவாக அடையாளம் காணமுடிகிறது. கட்சியின் உயர் பீடத்திலிருந்து வருகிற தீர்மானங்கள் சிலவேளைகளில், அடிமட்ட உறுப்பினர்களை முறையாக சென்றடைவதில்லை. தீர்மானங்களை முறையாக அறிவிப்புச் செய்யக்கூடிய பொறிமுறைகள் கட்சிக்குள் இருப்பதாகத் தெரியவில்லை. கட்சியின் தேசிய மாநாடுகள், தேர்தல் காலங்கள் தவிர்ந்த பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கட்சிக்கும் கட்சியின் வாக்காளர் தொகுதிக்கும் இடையேயான தொடர்பாடல்கள் மிகவும் குறைவாகவே உள்ளன. காங்கிரஸ் உள்ளூர் மட்டங்களில் பிரதேச மத்திய குழுக்களை அமைத்துச் செயற்படுகிற போதிலும் அங்கும் உள்ளூர் உயர்குழாம் ஆதிக்கம் மிகைத்திருக்கிற நிலையினை பரவலாக அவதானிக்க முடிகிறது. இதனால் கட்சியின் மத்திய குழுக்களுக்கும் மக்களுக்குமிடையிலான உறவும் குறிப்பிடும் படியானதாக இல்லை.

**5. பொறுப்புக்கூறலிலிருந்து விலகியிருத்தல்:** பொறுப்புக்கூறலிருந்து முஸ்லிம் காங்கிரஸ் விலகிச் செயற்படுகிறது என்ற குற்றச்சாட்டும் பரவலாக முன்வைக்கப்படுகிறது. தேர்தல் காலங்களில் கட்சி இயந்திரமும் அதிலுள்ளவர்களும் வாக்காளர்களுடன் ஏற்படுத்திக் கொள்ளும் தொடர்பும் - நெருக்கமும் தேர்தலுக்குப் பின்னர் இருப்பதில்லை. முஸ்லிம்களின் நலன்கள் பாதிக்கப்படுகிற போதும், உரிமைகள் மீறப்படுகிறபோதும் அதற்கான பொறுப்பினை முஸ்லிம் காங்கிரஸ் எடுத்துக்

கொள்வதில்லை. முஸ்லிம்கள் தொடர்பாக காங்கிரஸினால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களின் மூலம் தவறு ஏற்படுகிற சந்தர்ப்பங்களில் கூட கட்சி அதற்கான பொறுப்பினை எடுப்பதில்லை. கட்சி பிளவுகளைச் சந்தித்த பல சந்தர்ப்பங்களில் 'கட்சித் தலைமை எனும் காரணி' கூடிய செல்வாக்கு செலுத்திய போதும் அதற்கான பொறுப்பினை கட்சித் தலைமை எடுத்துக் கொள்ளவில்லை. மறுபுறம் கட்சியின் உறுப்பினர்களால் விடப்படுகிற தவறுகளுக்கான பொறுப்பினை அவர்கள் எடுத்துக்கொள்வதாகவும் தெரியவில்லை. மொத்தத்தில் காங்கிரஸ் வாக்காளர்களுக்கான அரசியல் பொறுப்புக்கூறலிருந்து தூரவிலகியிருக்கிறது. அதன் செயற்பாடுகளும் வெளிப்படைத் தன்மையுடையதாக இல்லை என்ற கருத்தினை அக்கட்சி சார்பானவர்களும் வாக்காளர்களும் கொண்டுள்ளனர்.

**6. தெளிவான அரசியல் வேலைத்திட்டம் இல்லாமை:** போருக்குப் பிந்திய இலங்கையில் இன நல்லிணக்கம், அதிகாரத்தினைப் பங்கீடு செய்தல், புதிய அரசியலமைப்பினைக் கொண்டுவருதல் முதலான விடயங்களில் அதிக கவனஞ்செலுத்தப்படுகிறது. இது விடயத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெளிவான வேலைத் திட்டங்களுடன் உள்ளதா என்ற கேள்வி எழுகிறது. காங்கிரஸின் அரசியல் மேடைகளில் முன்வைக்கப்படுகிற கருத்துக்களை அவதானிக்கிற போது அக்கட்சியின் அரசியல் வேலைத் திட்டம் சந்தர்ப்பவசமானது என்பது புலனாகிறது. அரசியல் அதிகாரத்தினைப் பங்கிட்டுக் கொள்ளுதல் விடயத்திலும் காங்கிரசுக்கென தெளிவான திட்டமில்லை. அதிகாரப் பங்கீடு விடயத்தில் காங்கிரஸ் காலத்திற்குக் காலம் மாறுபட்ட கருத்துக்களை முன்வைத்து வந்துள்ளது. வடக்கு - கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைத்து மீண்டும் ஒரு தனி அலகாக செயற்படவைப்பதா அல்லது வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தொடர்ந்தும் தனித்தனி மாகாணங்களாகச் செயற்பட இடமளிப்பதா என்ற விடயத்திலும் கட்சித் தலைமைத்துவமும் கட்சியின் ஏனைய உறுப்பினர்களும் மாறுபட்ட கருத்தில் உள்ளனர். அதேவேளை, புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் முஸ்லிம் அபிலாசைகளை பிரதிபலிக்கக்கூடிய முன்நகல் வரைபோ, அதனைச் சாத்தியப்படுத்துவதற்கான காத்திரமான முன்னெடுப்புக்களோ காங்கிரஸிடம் இல்லை என்றே கூறவேண்டியுள்ளது.

**7. அரசியல் பிரதிநிதித்துவத்தினை பங்கீடு செய்வதிலுள்ள நெருக்கடி:** பாராளுமன்ற, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற தேர்தல்களுக்கு முன்னர் கட்சி சார்பாக யார் யாரை வேட்பாளராக நிறுத்துவது, தேர்தல்களின் பின்னர் ஒதுக்கப்படுகிற ஆசனங்களைப் பங்கீடு செய்தல் (தேசியப் பட்டியல் ஆசனம்) உள்ளிட்ட விடயங்களில் முஸ்லிம் காங்கிரஸ் தொடர்ச்சியான பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகிறது. சில சந்தர்ப்பங்களில் தேசியப் பட்டியல் ஆசனத்தினைப் பங்கீடு செய்கிறபோதும் அமைச்சுப் பொறுப்புக்களைப் பெற்றுக்கொடுக்கிற போதும் காங்கிரஸ் தெளிவானதொரு கொள்கையினைக் கடைப்பிடிப்பதில்லை. எடுத்துக்காட்டாக 2007 - 2015 வரையான காலப்பகுதியில் அம்பாரை மாவட்டத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள சம்மாந்துறை தேர்தல் தொகுதி, அரசியல் பிரதிநிதித்துவம் எதனையும் கொண்டிராதிருந்தபோது, நிந்தவூர் பிரதேசத்தினை சேர்ந்த இருவர் முஸ்லிம் காங்கிரசின் பாராளுமன்ற உறுப்பினர்களாக செயற்பட முடிந்தது. இவ்விடயங்களைக் கருத்திற்கொண்டு அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்பான தெளிவான வேலைத் திட்டமொன்றினை கட்சி முன்னெடுப்பதன் மூலம் காங்கிரஸின் அரசியல் பிரதிநிதித்துவ எண்ணிக்கையினை அதிகரித்துக்கொள்ள முடியும். அதேவேளை, மாகாண அரசாங்க அமைச்சினை அல்லது பொறுப்புக்களை ஒப்படைப்பது விடயத்திலும் கடந்த காலங்களில் காங்கிரஸ் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுவந்துள்ளது.

**8. எதிர்ப்பு அரசியலை முன்னெடுத்துச் செல்லல்:** ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் பிரவேசம் எதிர்க்கட்சி அரசியிலில் இருந்து ஆரம்பிக்கிற போதிலும் ஆளும் கட்சிகளின் முக்கிய பங்காளியாக மாறியதன் பின்னரே, அக்கட்சி தீவிர வளர்ச்சி கண்டது. சிறுபான்மை சமூகமொன்றின் கட்சி என்றவகையில் வாக்குகளைத் திரட்டுவதற்கு எதிர்ப்பு அரசியல் உத்தி பயன்படுகிற போதிலும் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு எதிர்ப்பு அரசியல் பயனுடையதல்ல. இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்தவரையில், அவர்கள் 'உரிமை அரசியலிலும் பார்க்க அபிவிருத்தி அரசியலில்' அதிக நாட்டம் கொண்டுள்ளனர். இந்நிலையில் 2000 ஆம் ஆண்டிற்குப் பின்னரான காலப்பகுதியில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பெரும்பாலும் எதிர்க்கட்சிகளுடன் இணைந்தே செயற்பட்டிருக்கிறது. தேர்தல் காலங்களிலும் எதிர்ப்பு அரசியல் பிரச்சாரங்களையே காங்கிரஸ் மேற்கொண்டு வந்துள்ளது. சில சந்தர்ப்பங்களில் அரசாங்கக் கட்சிகளுடன் இணைந்திருந்த போதிலும் அவ்வரசாங்கங்களினால் காங்கிரஸ் முக்கிய இடத்தில் வைத்துப் பார்க்கப்படவில்லை. 2015 இற்குப் பின்னர் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தில் முஸ்லிம் காங்கிரஸ் முக்கிய பங்காற்றியபோதிலும் முஸ்லிம்களின் உள்ளக அரசியலிலும் நாட்டின்

அரசியல் புறச்சூழலிலும் நிகழ்கிற விடயங்கள் காங்கிரஸினைப் பாதித்துள்ளன என்றே கூறவேண் டியுள்ளது.

**9. மத, கலாசார சுதந்திரத்தினை உறுதிப்படுத்தத் தவறியுள்ளமை:** போருக்குப் பிந்திய இலங்கை யில் மத, கலாசார வன்முறைகள் தீவிரமாக அதிகரித்துள்ளன. குறிப்பாக சிறுபான்மை முஸ்லிம் களை இலக்குவைத்து சிங்கள பௌத்த கடும்போக்காளர்களினால் தீவிரமாக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதனை அவதானிக்க முடிகிறது. போருக்கு முன்னரும் முஸ்லிம்களுக்கு எதிராக பல வன்முறைகள் இடம்பெற்றிருந்தபோதிலும் போருக்குப் பிந்திய காலத்தில் இடம்பெற்றுவரும் வன்முறைகள் மிகவும் பாரதூரமானவையாகும். போருக்குப் பின்னர் அளுத்கமையில் ஆரம்பித்த முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் அம்பாரை, திகன, புத்தளம், குருநாகல், மினுவாங்கொடை என நாட்டின் பல இடங்களுக்கும் பரவியுள்ளன. இலங்கை முஸ்லிம்களின் மத, கலாசார சின்னங்கள், பொருளாதாரம் என்பவற்றில் இவ்வன் முறைகள் அதிகமான பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளன. இவ்வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதில் இலங்கை முஸ்லிம்களின் பெரும்பான்மை ஆதரவினைப் பெற்ற கட்சி என்றவகையில், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆற்றிய பங்களிப்புக் குறிப்பிடும்படியானதாக இல்லை. ஒரு கட்டத்தில் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் அரசாங்கத்தில் நீதியமைச்சுப் பொறுப்பினை வகித்த போதிலும் அக்காலத்திலும் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் தாராளமாக நடந்தேறின. இவ்விடயங்களில் அரசாங்கத்திற்கு சில அழுத்தங்களைப் பிறப்பித்தல், பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருதல், குறித்த வன்முறைகளை சர்வதேசமயப்படுத்துதல் உள்ளிட்ட சில விடயங்களில் காங்கிரஸ் கவனம் செலுத்தி வருகிறபோதிலும் முஸ்லிம்களின் மத, கலாசார சுதந்திரத்தினைப் பாதுகாப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸ் மேற்கொள்கிற நடவடிக்கைகள் போதுமா னதல்ல என்ற குற்றச்சாட்டுக்கள் பரவலாக முன்வைக்கப்படுகின்றன.

**10. கடந்தகாலத் தவறுகள்:** ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கடந்த காலத்தில் விட்ட தவறுகளும் அதன் சமகாலத் தொய்வுகளுக்கு காரணமாக அமைந்துள்ளன. குறிப்பாக இலங்கையில் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் அரசியலமைப்புக்கான பதினெட்டாவது திருத்தத்திற்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளித்தது. இது விடயத்தில் காங்கிரஸ் எடுத்த முடிவு, அதற்காக ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள், அதன் பின்னர் ஏற்பட்ட நிலைமைகளை அவதானிக்கிறபோது, காங்கிரஸ் அதனது வரலாற்றில் விட்ட மிகப்பெரிய தவறாக அது சுட்டிக் காட்டப்படுகிறது. அதேவேளை, ராஜபக்ஷ அரசாங்க காலத்தில் முன்மொழியப்பட்ட திவிநெகும சட்டமூல விடயத்திலும் காங்கிரஸ் இரட்டை வேடத்தினைக் கொண்டிருந்தது. குறித்த சட்ட மூலம் மாகாண சபைகளின் சுயாதீனத்தைப் பாதிப்பதாக அமைந்திருந்த நிலையில், அச்சட்டமூலத்திற்கு எதிரான கருத்துக்களை மக்கள் மத்தியில் முன்வைத்த காங்கிரஸ், மாகாண சபைகளிலும் பாராளுமன்றத்திலும் குறித்த சட்டமூலத்திற்கு ஆதரவாக வாக்களித்தது. கட்சியில் மேலும் ஏற்படவிருந்த பிளவினை தடுத்து கட்சியினைப் பாதுகாப்பதற்கே இவ்வாறான தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாக கட்சித் தலைமை பிரஸ்தாபித்தபோதிலும் குறுகிய காலத்தில் காங்கிரஸ் தொடர் பாக மக்கள் மத்தியில் இருந்த நம்பிக்கை குறைவடைவதற்கு அக்கட்சி கடந்தகாலங்களில் விட்ட தவறுகள் காரணமாக அமைந்தன.

## 6. அவசியமான சீர்திருத்தங்கள்

முஸ்லிம் அரசியல் பரப்பில் பல்வேறு நபர்களும் கட்சிகளும் தொழிற்பட்டு வருகிறபோதிலும் சமகாலத்தில் முஸ்லிம் அடையாளத்தினை தெளிவாகப் பிரதிபலிக்கக் கூடிய ஒரு கட்சியாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளது. ரவூப் ஹக்கீமின் தலைமைத்துவத்தின் கீழ் செயற்படும் காங்கிரஸ், சமகாலத்தில் பல தொய்வுகளுடன் பயணிக்கின்றது. இத்தொய்வுகளிலிருந்து கட்சி யினை மீட்டெடுப்பதற்கு அவசியமான சில சீர்திருத்தங்களை பின்வருமாறு நோக்கலாம்:

**1. சமகாலத்திற்குப் பொருந்தக் கூடிய கொள்கைகள்:** ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தாபிக்கப்பட்ட போது, இந்நாடு சிவில் யுத்தமொன்றுக்கு முகம்கொடுத்திருந்தது; சகல மட்டங்களிலும் இன ரீதியான அரசியல் மேலெழுந்திருந்தது. இத்தகைய சூழலுக்கு முற்றிலும் மாற்றமானதொரு சூழலே இன்று நிலவுகிறது. இன்று நாட்டில் சிவில் யுத்தம் முடிவுற்றுள்ளது; போருக்குப் பிந்திய நல்லிணக்கம் குறித்த ஆர்வம் தீவிரமாக அதிகரித்துள்ளது. இருப்பினும் முஸ்லிம்களின் மத, கலாசார, சிவில் உரிமைகள் கேள்விக்குள்ளாக்கப்பட்டு வருகிறது; சர்வதேச பயங்கரவாத செயற் பாடுகள் இலங்கை முஸ்லிம்களை வெகுவாகப் பாதித்துள்ளன. இந்நிலை மாறுதல்களுக்கு ஏற்ற விதத்திலான கொள்கை மறுசீரமைப்புக்களை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மேற்கொள் ளவில்லை. வருடந்தோறும் கட்சி மகாநாடுகள் நடத்தப்படுகிற போதிலும் அங்கு மேற்கொள்

ளப்படும் சீர்திருத்தங்கள் அமைப்பு ரீதியானவையாக உள்ளனவே தவிர, கொள்கை - இலக்கு சார்ந்தவையாக இல்லை. எனவேதான் புதிய சவால்களை எதிர்கொள்ளக்கூடிய வகையில் பொருத்தமான கொள்கை இலக்குகளை வகுத்துக் கொள்ள வேண்டிய தேவை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு உண்டு.

**2. பொறுப்புக்களோடு இணைந்ததாக அதிகாரம் பரவலாக்கப்படுதல்:** ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதிகாரப் படிநிலையில் தலைமைத்துவத்தின் ஆதிக்கமே மிகைத்துள்ளது. தலைமையிடம் அதிகாரம் ஒன்றுகுவிக்கப்பட்ட கட்சி மாதிரியினையே காங்கிரஸ் பின்பற்றுகிறது. காங்கிரஸ் எதிர்கொள்ளும் தொடர்ச்சியான உட்கட்சி பிளவுகளிலிருந்தும் கழுத்தறுப்புக்களி லிருந்தும் கட்சியினைப் பாதுகாப்பதற்கான உறுதியான தலைமைத்துவம் அவசியம் என்ற போதிலும், காங்கிரசினை மேலும் ஜனரஞ்சகப்படுத்துவதற்கு அதிகாரத்தோடு இணைந்து பொறுப்புக்கள் பரவலாக்கப்படுவது இன்றியமையாததாகும். நடைமுறையில் கட்சியின் படிநிலை வரிசையில் உள்ள அமைப்புக்களுக்கு போதுமான அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. கட்சித் தலைமையின் தீர்மானங்களையும் உத்தரவுகளையும் நடைமுறைப்படுத்தும் துணைநிலை வகிபா கத்தினையே அவ்வமைப்புக்கள் கொண்டுள்ளன. எனவேதான் கட்சியின் பல்வேறு பதவி நிலை யில் உள்ளவர்கள் அடங்கலாக கட்சியின் துணைநிலை அமைப்புகளுக்கும் பொறுப்புக்களோடு அதிகாரத்தினை பரவலாக்குவதன் மூலம் சகல பரப்புக்களிலும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் செயற்பாட்டு வகிபாகத்தினை அதிகரிக்க முடியும்.

**3. சமூக நலன்களை முதன்மைப்படுத்துதல்:** ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதன் உருவாக்கம் முதல் ஒரு சமூக - அரசியல் இயக்கமாகவே தன்னை இனம்காட்டி வந்திருக்கிறது; சமூகம் தொடர்பான கருத்தாடல்களை முதன்மைப்படுத்தியே அது வாக்காளர்களை ஒன்றுதிரட்டியது. அஷ்ரஃபின் தலைமைத்துவத்தின் கீழ் சமூக நலன்களை அரசியல் ரீதியாக வெற்றிகொள்வதிலும் காங்கிரஸ் முக்கிய பங்காற்றியிருக்கிறது. ஆனால் காங்கிரஸ் தொடர்பில் சமகாலத்தில் எழுந்துள்ள மிக முக்கிய விமர்சனம், அக்கட்சி சமூக நலன்களிலும் பார்க்க தனிநபர் நலன்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது என்பதாகும். முற்றிலும் யதார்த்தபூர்வமான சமூக, அரசியல் போராட்டத்தில் தனிநபர் நலன் சமூக நலன்களால் மாற்றீடு செய்யப்பட வேண்டும். எனவேதான் கட்சியின் தலைமைத்துவம் உள்ளடங்கலாக அத்தனை உறுப்பினர்களும் சமூக நலன்களுக்கு முன்னுரிமையளித்து செயற்பட வேண்டியுள்ளது. அதிலும்குறிப்பாக அரசியல் தீர்வுக்கான முஸ்லிம்களின் அபிலாசைகள் என்ற விடயத்தில் கட்சி தெளிவான கொள்கைத் தீர்மானம் ஒன்றிற்கு வரவேண்டியுள்ளதுடன் அதற்கான சமூக அங்கீகாரத்தினையும் பெற வேண்டும். இது விடயத்தில் முஸ்லிம் புலமையாளர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள் மத்தியில் திறந்த கலந்துரையாடல்களை நிகழ்த்த வேண்டிய தேவையுள்ளது. அதேவேளை, கட்சித் தலை மைத்துவமும் கட்சியின் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசாங்கத் தலைவர்களுடனும் பாதுகாப்புத் தரப்புக்களுடனும் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை மேற்கொள்வதன் மூலம் தற்போது எழுந்துள்ள மத - கலாசார ரீதியான வெறுப்பூட்டல்களையும் வன்முறைகளையும் முடிவுக்குக் கொண்டுவர முடியும்..

**4. கூட்டுச் செயற்பாடுகளை ஊக்குவித்தல்:** சமகாலத்தில் முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்கள் மத்தியில் கூட்டுச் செயற்பாடுகள் இல்லாமலிருப்பதும் ஒரு முக்கிய பிரச்சினையாக உள்ளது. ஒவ்வொரு உறுப்பினரும் கட்சியினை அன்றி, தத்தமது அரசியல் இருப்பினை பாதுகாத்துக் கொள்வதற்கான முயற்சிகளில் அதிகம் ஈடுபடுவதனை அவதானிக்க முடிகிறது. கட்சி என்பது தேர்தலுக்கான ஒரு இயந்திரமாக அன்றி, கட்சிக்காக உறுப்பினர்கள் அல்ல என்ற நிலையே காங்கிரஸில் உள்ளது. இவ்விதம் காங்கிரஸின் உறுப்பினர்கள் மத்தியில் கூட்டுச் செயற்பாடுகள் குறைவாக இருப்பது அண்மைக்காலமாக கட்சியின் வளர்ச்சியினை வெகுவாகப் பாதித்துள்ளது. ஒரே அரசியல் இயக்கத்தினை சேர்ந்தவர்கள் என்றவகையில், காங்கிரஸின் குறிக்கோள்களை பலமாக முன்னெடுத்துச் செல்வதற்கு அதன் உறுப்பினர்களுக்கிடையே ஒருங்கிணைந்த முயற்சி அவசியமாகிறது. எனவேதான் கட்சித் தலைமைத்துவமும் உயர்பீடமும் கட்சி உறுப்பினர்களது கூட்டுச் செயற்பாடுகளில் அதிக கவனமெடுக்க வேண்டும். இதற்காக கட்சி ஒருங்கிணைப்புக் குழுக்களைப் பலப்படுத்துவதுடன், கட்சிக்கென கண்காணிப்பு மற்றும் மீளாய்வுப் பொறிமுறை ஒன்றினையும் உருவாக்கிச் செயற்படுத்த முடியும்.

**5. உள்ளக ஜனநாயகத்தினை ஏற்படுத்துதல்:** ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் உள்ளக ஜனநாயகம் தொடர்பாக கட்சிக்கு உள்ளேயும் வெளியேயும் பல விமர்சனங்கள் காணப்படு கின்றன. கட்சியின் உயர்பீடக் கூட்டங்களில் சுதந்திரமாக கருத்துக்களை தெரிவிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்படுவதில்லை; சில சந்தர்ப்பங்களில் வழங்கப்படுகின்ற வாய்ப்புக்கள் தடைப் படுத்தப்படுகின்றன. இதுபோன்ற குற்றச்சாட்டுக்கள் கட்சியின் உயர்பீட உறுப்பினர்களால் முன்

வைக்கப்பட்டு வந்துள்ளன. கட்சிக்குள்ளே இருந்த சிலரது அபிப்பிராயத்தின்படி காங்கிரஸில் உள்ளக ஜனநாயகமன்றி தலைமைத்துவ சர்வாதிகாரமே நிலவுகிறது. சிலவேளை, கட்சியின் உள்ளக ஜனநாயகத்தினை கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் கட்சியில் பல பிளவுக ளையும் ஏற்படுத்தியிருக்கின்றன. எனவேதான் ஜனநாயக அரசியலில் நாட்டம்கொண்ட ஒரு கட்சி என்றவகையில் கட்சிக்கு உள்ளே திறந்த சம்பாஷனைக்கு இடமளிக்கக் கூடிய; மாற்றுக் கருத்துக்களை உள்வாங்கக் கூடிய; ஜனநாயக விழுமியங்களைப் பேணவேண்டிய தேவை யுள்ளது. இதன் மூலம் கட்சிக்கும் தலைமைக்கும் எதிராக எழுகிற விமர்சனங்களை கட்சிக்குள்ளே தீர்த்துக் கொள்ள முடிவதுடன் கட்சி தொடர்பான மக்களின் நன்மதிப்பினையும் அதிகரிக்க முடியும்.

**6. இன நல்லிணக்க வேலைத் திட்டங்களை முன்னிலைப்படுத்துதல்:** சிவில் யுத்தத்திற்குப் பிந்திய இலங்கையில் இன நல்லிணக்கம் குறித்த கருத்தாடல் முக்கிய இடத்தினைப் பிடித்துள்ள நிலையில், நல்லிணக்கத்திற்கு உதவக்கூடிய விதத்தில் மிகவும் பொறுப்புணர்ச்சியுடன் காங்கிரஸ் செயற்பட வேண்டியுள்ளது. சமூகம் சார்ந்த நலன்களில் விட்டுக் கொடுப்புச் செய்யாத அதேநேரம், தேசிய ஐக்கியத்தில் கவனமெடுத்துச் செயற்பட வேண்டியுள்ளது. இதற்காக சிங்கள, தமிழ் கட்சிகளுடனும் அமைப்புக்களுடனும் காங்கிரஸ் தொடர்ச்சியான உறவுகளை ஏற்படுத்திச் செயற்பட வேண்டிய தேவையிருக்கிறது. அண்மைக்காலமாக இலங்கையில் உருவாகியுள்ள அசாதாரண சூழ்நிலையின் போது காங்கிரஸ் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்கிற போதிலும் சமூக மட்டத்தில் காங்கிரஸின் பொறுப்புத் தொடர்பாக பலத்த விமர்சனங்கள் நிலவுகின்றன. அதிகாரத்தினைப் பங்கிட்டுக் கொள்ளுதல், வடக்கு - கிழக்கு இணைப்பு, புதிய அரசியலமைப்பு உருவாக்கம் உள்ளிட்ட விடயங்களில் காங்கிரஸின் மனச்சாட்சி சோதித்துப் பார்க்கப்படுகிற நிலையும் உண்டு. இந்நாட்டில் முஸ்லிம்கள் ஒரு சிறுபான்மை சமூகத்தவர் என்றவகையில் ஏனைய இனத்தவர்களுடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற விடயமும் கட்சியின் வேலைத் திட்டங்களில் முதன்மை பெறவேண்டியுள்ளது.

**7. இளைஞர்களை வலுவூட்டுதல்:** காங்கிரஸ் உருவாக்கத்தில் முஸ்லிம் இளைஞர்களின் வகிபாகம் குறிப்பிடத்தக்கது. தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களால் கவரப்பட்டபோது, முஸ்லிம் இளைஞர்கள் அரசியலால் கவரப்படும் கைங்கரியத்தினை காங்கிரஸ் அதன் ஆரம்ப நாட்களில் செய்தது. இதற்காக காங்கிரஸ் பல்வேறு இளைஞர் குழுக்களை அமைத்துச் செயற்பட்டது. காங்கிரஸின் ஆதரவுத் தளத்தினை அதிகரிப்பதற்கும் இளைஞர்கள் காத்திரமான பங்களிப்பினை வழங்கினர். உண்மையில் ஒரு சமூக, அரசியல் இயக்கத்தின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் இளைஞர்கள் கார ணமாகின்றனர். ஆனால் அண்மைக்காலமாக காங்கிரஸ் தொடர்பிலோ அதன் தலைமைத்துவம் தொடர்பிலோ இளைஞர்கள் மத்தியிலிருந்த நம்பிக்கை வெகுவாகக் குறைந்து செல்கிறது. சமூக ஊடகங்களிலும் ஏனைய தளங்களிலும் காங்கிரசுக்கு எதிரான விமர்சனங்களை முன்வைப்பதில் இளைஞர்கள் முன்நிற்கின்றனர். எனவேதான் காங்கிரஸ் அதனது சமூகப் பொறுப்பினை உணர்ந்து, அதன் எதிர்காலம் கருதி இளைஞர்களை பயிற்றுவிக்க வேண்டிய தேவையிருக்கிறது. காங்கிரஸில் உள்ள சில அரசியல்வாதிகள் இவ்விடயத்தில் கவனம்செலுத்துகிற போதிலும் கட்சி ரீதியான வலுவூட்டல் மேலும் அவசியமாகிறது; சமூக பிரக்ஞையை ஏற்படுத்துகிற விடயங்களில் முஸ்லிம் இளைஞர்களை ஒன்றுதிரட்ட வேண்டிய தேவை காங்கிரசுக்குள்ளது.

**8. இரண்டாம் நிலைத் தலைவர்களை உருவாக்குதல்:** கட்சிகளுக்குள்ளேயும் வெளியேயும் இரண் டாம் நிலைத் தலைவர்களை உருவாக்குவது கட்சியின் ஸ்திரப்பாட்டிற்கு ஆபத்தானது என்று கருதப்படுகிற போதிலும் கட்சித் தலைமைத்துவ வெற்றிடங்களை எதிர்கொள்கிற சந்தர்ப் பங்களில் கட்சியினை வழிநடத்திச் செல்லத்தக்க இரண்டாம் நிலைத் தலைமைத்துவம் அவசிய மாகிறது. குறிப்பாக 2000 ஆம் ஆண்டில் காங்கிரஸின் தலைவர் அஷ்ர.்.ப் மரணித்தபோது கட்சிக்குள்ளே எழுந்த முதல் நெருக்கடி கட்சியின் தலைமைத்துவத்தினை யார் பொறுப்பேற்பது என்பதாகவே இருந்தது. பின்னர் அதுவே கட்சியில் பல புதிய பிளவுகளை ஏற்படுத்தும் பிரதான காரணியாகவும் அமைந்தது. அஷ்ர.்.ப் அவரது காலத்திலும் அவருக்கு அடுத்த தலைமைத்துவத் தினை பிரகடனம் செய்திருக்கவில்லை. இன்றுள்ள தலைமைத்துவமும் இரண்டாம் நிலைத் தலைவர்களுக்கு இடம் கொடுப்பதில்லை என்ற குற்றச்சாட்டு நிலவுகிறது. எனவேதான் கட்சியின் எதிர்காலம் கருதி இரண்டாம் நிலைத் தலைவர்களை வளர்க்க வேண்டிய தேவையிருக்கிறது. இதற்காக கட்சியில் உள்ள இளைய தலைமுறையினரை பயிற்றுவிக்க முடியும். சமகாலத்தில் காங்கிரசுக்குள்ளே பல துடிப்பான, ஆளுமையுள்ள இளைஞர்கள் பலர் இருக்கின்றனர். அவர் களை முறையாக பயிற்றுவிப்பதன் மூலம் எதிர்காலத்தில் சிறந்த தலைவர்களை முஸ்லிம் காங்கிரஸ் பெறக்கூடும்.

**9. சர்வதேச தொடர்புகளைப் பேணுதல்:** இலங்கையில் சிங்கள பெரும்பான்மையினரதும் தமிழ் சிறுபான்மையினரதும் பிரச்சினைகளும் நலன்களும் சர்வதேசமயப்படுத்தப்பட்டிருக்கும் அளவிற்கு முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் சர்வதேசமயப்படுத்தப்படவில்லை. உலகில் கணி சமான முஸ்லிம் நாடுகள் காணப்படுகிற போதிலும் அந்நாடுகளுடனான காங்கிரஸின் தொடர்பு என்பது வரையறுக்கப்பட்டதாகவே உள்ளது. தூதுவர்களைச் சந்தித்தல், சர்வதேச ஊடகங் களுக்கு செவ்விகளை வழங்குதல், வெளிநாட்டு விஜயங்களை மேற்கொள்ளுதல் போன்ற சில முயற்சிகளை காங்கிரஸ் முன்னெடுக்கிற போதிலும் இலங்கை முஸ்லிம்கள் தொடர்பான சர்வதேச கவனயீர்ப்பினை ஏற்படுத்துமளவிற்கு அம்முயற்சிகள் இருப்பதாகத் தெரியவில்லை. இன்றுள்ள சூழ்நிலையில் முஸ்லிம்கள் தேசிய ரீதியாக பல நெருக்குவாரங்களுக்கு உட்பட் டுள்ளனர். உள்ளக ரீதியாக முஸ்லிம்களை பாதுகாப்பதற்குள்ள அரசியல் பொறிமுறைகளும் தோல்வி கண்டுள்ளன. இந்நிலையில் சர்வதேச கவனஈர்ப்பு அவசியமாகிறது. அதேபோன்று, புலம் பெயர்ந்து வாழும் முஸ்லிம்கள் தொடர்பிலும் காங்கிரஸ் அதிக கவனம் செலுத்த வேண்டி யுள்ளது. எனவேதான் சமூகப் பொறுப்பினை சுமந்த ஒரு கட்சி என்றவகையில், காங்கிரஸ் சர்வதேச தொடர்புகளை விஷ்தரிக்க வேண்டிய தேவையுள்ளது. குறிப்பாக இலங்கையுடன் மிக நெருக்கமாகச் செயற்படும் முஸ்லிம் நாடுகளுடன் தொடர்புகளை விஷ்தரித்து முஸ்லிம் நலன்கள் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்து கொள்ளமுடியும். இதன் மூலம் இலங்கைவாழ் முஸ்லிம்களின் நலன் தொடர்பான சர்வதேச அபிப்பிராயத்தினையும் உருவாக்க முடியும்.

**10. முஸ்லிம் சமூக அரசியலை ஆவணப்படுத்துதல்:** இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, பாரம்பரியம் மற்றும் சமூக - பொருளாதார - அரசியல் இயங்குநிலை தொடர்பான ஆவணப்ப டுத்தல் என்ற விடயம் மிக முக்கியமானதாகும். பல்லாயிர வருடகாலம் பழைமையான முஸ்லிம்களின் வரலாற்றுப் பாரம்பரியம் சிதைவடைந்து செல்கிற இக்கால சூழ்நிலையில், அது குறித்த ஆவணமாக்கல் செயற்திட்டமொன்றினை காங்கிரஸ் முன்னெடுப்பது அவசியமானது. இதற்கென காங்கிரஸ் ஒரு முஸ்லிம் கல்வியியலாளர் குழுவினை அமைத்துச் செயற்பட முடியும். மிக அண்மைய நாட்களில் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடுகளை ஒழுங்கு செய்தல், இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் தொடர்பான ஒரு பிரிவினை இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நிறுவுதல் உள்ளிட்ட விடயங்களில் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் மேற்கொண்டு வரும் முயற்சி பாராட்டத்தக்கது. காங்கிரஸ் ஒரு சமூக, அரசியல் இயக்கம் என்றவகையில், அக்கட்சி துறைசார் நிபுணர்கள், இலக்கியவாதிகள், சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட புலமைசார் வட்டமொன்றினை உருவாக்கிச் செயற்படுத்துவதன் மூலம் அதன் சமூகப் பங்களிப்பினை மேலும் அதிகரிக்க முடியும். முஸ்லிம்களின் தேசியப் பிரச்சினை குறித்த விடயத்திலும், இக்குழுக்களின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டு செயற்பட முடியும்.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் தவிர்ந்த கட்சியின் உள்ளூர் குழுக்களை புனரமைத்தல், தேசிய அரசியல் நீரோட்டத்தில் இலங்கை முஸ்லிம்களின் அடையாளம் சிதைந்துவிடாது பாதுகாப் பதற்கேற்ற மத்தியதரக் கொள்கையினை வகுத்தல், கட்சியின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் சகல பிரதேசங்களையும் கருத்திற்கொள்ளுதல், வேலைவாய்ப்பு உள்ளிட்ட விடயங் களில் தெளிவான கொள்கை ஒன்றினை வகுத்துச் செயற்படுதல், கட்சி உறுப்பினர்களுக்கு பயிற்சியளிப்பதற்கான தனியான பிரிவொன்றினை உருவாக்குதல், தேசிய ரீதியாக முக்கியத் துவம் வாய்ந்த விடயங்களில் மக்களுக்கு தொடர்ச்சியான விழிப்புணர்வினை ஏற்படுத்துதல், மக்களின் மனக்குறைகளுக்கு செவிசாய்த்தல், கட்சியின் அங்கத்துவ எண்ணிக்கையினை வரு டாந்தம் அதிகரிக்க நடவடிக்கை எடுத்தல், கட்சிக்கும் மக்களுக்குமிடையிலான தொடர்பினை அதிகரிப்பதற்கு புதிய தொழில்நுட்ப தந்திரோபாயங்களைக் கையாளுதல், கட்சி அங்கத்துவம் தொடர்பான பதிவொன்றினை பேணிவருதல், கட்சியின் செயற்பாடுகள் தொடர்பில் தொடர்ச் சியான மதிப்பீடுகளை மேற்கொண்டு அதிலிருந்து கற்றுக்கொள்ளுதல், முஸ்லிம் பெண்களின் அரசியல் பங்கேற்பினை அதிகரிப்பதற்கான வேலைத் திட்டமொன்றினை வகுத்துச் செயற்படுதல், கட்சிக் கட்டமைப்பிலுள்ள பதவி நிலைகளில் மாற்றங்களைக் கொண்டுவருகிற போது குடும்ப உறவு, பிரதேசவாதம் என்பவற்றிற்கு முற்றுப்புள்ளி வைத்தல், அரசியல் ரீதியாக பின்தங் கியுள்ள பிரதேசங்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தினை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல், கட்சியின் செயலாளர் உள்ளிட்ட சில பதவிகளுக்கு கட்சியின் பாராளுமன்ற உறுப் பினர்கள் அல்லாதவர்களை நியமனம் செய்தல், கட்சி உறுப்பினர்களின் ஒழுக்கத்திலும் நடத்தை யிலும் கவனம் செலுத்துதல், தேர்தல் காலங்களில் மட்டுமல்லாது ஏனைய நேரங்களிலும் மக்கள் சந்திப்புக்களை ஏற்பாடு செய்தல், முஸ்லிம் அல்லாதவர்களின் ஆதரவினைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் போன்ற விடயங்களில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

## 7. முடிவுரை

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் பல்பரிமாண வளர்ச்சியினைப் பெற்றுள்ளது. பிரித்தானியர் காலம் முதல் இன்று வரை முஸ்லிம் அரசியலில் வியக்கத்தக்க பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. ஒரு கட்டத்தில் இலங்கை முஸ்லிம்கள் தெற்கு - கிழக்கு என பிரிந்து பெரும் தேசியக் கட்சிகளிலும் தமிழ் சிறுபான்மை கட்சியிலும் இணைந்திருந்த நிலை மாறி, 1980 களுக்குப் பின்னர் முஸ்லிம்கள் தனித்துவமான தேசிய அடையாளத்துடன் கூடிய அரசியலை நோக்கி நகர்ந் தனர். இந்நகர்வில் எம்.எச்.எம். அஷ்ர∴ப் மற்றும் அவரது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் வகிபாகம் குறிப்பிடத்தக்கதாகும். இதன்படி 1980 களில் வடக்கு, கிழக்கில் வாழ்ந்த முஸ்லிம்களின் பாதுகாப்பு கேள்விக் குறியானபோது அவர்களது பாதுகாப்பினை உறுதிப்படுத்தி, முஸ்லிம்களின் தனித்துவத்தினைப் பேணுவதற்கான ஒரு பெரும் சமூக - அரசியல் இயக்கமாக முஸ்லிம் காங்கிரஸ் வளர்ச்சியடைந்தது.

முஸ்லிம் காங்கிரஸ் அஷ்ர∴பின் தலைமைத்துவத்தின் கீழ் முழு வீச்சுடன் செயற்பட்டது. அஷ்ர∴பின் அரசியல் முதிர்ச்சியும் அவரது ஆளுமையும் துணிகரப் பண்பும் கம்பீரமான தோற்றமும் தேசிய அரசியல் அரங்கில் முஸ்லிம் குரலை ஓங்கி ஒலிக்கச் செய்தன. அஷ்ர∴பும் அவரது காங்கிரசும் 1994 இல் அமைந்த அரசாங்கத்தில் முக்கிய பாத்திரத்தினை எடுத்தனர். இதன்மூலம் காங்கிரஸ் பெற்றுக்கொண்ட வரப்பிரசாதங்களைக் கொண்டு அஷ்ர∴ப் முஸ்லிம் சமூகத்தினை எழுச்சி நிலைக்குக் கொண்டு சென்றார். எனினும் 2000 ஆம் ஆண்டில் இடம்பெற்ற அஷ்ர∴பின் அகால மரணம் அவரது முஸ்லிம் காங்கிரஸின் வளர்ச்சியில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியது. அஷ்ர∴பின் மறைவிற்குப் பின்னர் காங்கிரஸின் தலைமைத்துவத்தினை ரவூப் ஹக்கீம் பொறுப்பேற்ற போதிலும் கட்சி பல கூறுகளாக உடைந்து செல்வதை அவரால் தடுக்க முடியவில்லை.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் புதிய தலைவர் கட்சியினையும் கட்சித் தலைமைத்துவத்தி னையும் பாதுகாப்பதிலேயே அதிக நேரத்தினை செலவிட வேண்டி ஏற்பட்டது. அநேகமாக அஷ்ர∴புக்குப் பிந்திய தசாப்தத்தில் எதிர்க்கட்சி அரசியல் பாதையினைத் தெரிவு செய்த காங்கிரஸ், முஸ்லிம் மக்களின் நலன் விடயத்தில் பெரிதாக எதனையும் சாதிக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் உண்டு. அண்மைக்காலமாக இலங்கை முஸ்லிம்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள மத, கலாசார வன்முறைகளை கட்டுப்படுத்துவதிலும் முஸ்லிம் காங்கிரஸின் பங்களிப்பு போதுமானதல்ல என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. முஸ்லிம் காங்கிரஸ் தற்போதுள்ள அரசாங்கத்தில் முக்கிய பங்காளிக் கட்சியாக இருக்கிற போதிலும் அதன் சமூகப் பங்களிப்புகள் குறிப்பிடும்படியானதாக இல்லை.

இவ்விதம் காங்கிரஸ் தொடர்பாக எழுந்திருக்கிற பல்வேறு விமர்சனங்களுக்கும் பதிலளிக்கத் தக்கதான பொறிமுறையும் காங்கிரஸில் இல்லை. ஒரு சமூக, அரசியல் இயக்கம் என்ற வகையில், காங்கிரஸ் சமகாலத்தில் பல தொய்வுகளுடன் பயணிக்கிறது. இத்தொய்வு களிலிருந்து மீண்டெழுவதற்கு அவ்வியக்கம் மிக நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. தற்காலத்திற்குப் பொருந்தக்கூடிய பல மறுசீரமைப்புக்களை அது மேற்கொள்ள வேண்டியுள்ளது. இருப்பினும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தொடர்பாக எழுந்திருக்கிற பலமான சவால்களுக்கு மத்தியிலும் அக்கட்சியினால் தொடர்ந்தும் செயற்பட முடிந்திருக்கிறது. தேசிய அரசியலிலும் உள்ளூர் அரசியலிலும் குறிப்பிடும்படியான வாக்காளர் ஆதரவினை அக்கட்சி இன்னும் தக்க வைத்துள்ளது. தேசிய அரசியலில் அக்கட்சிக்கு இருக்கும் முக்கியத்துவத்தினை அது இன்னும் இழந்துவிடவில்லை எனலாம்.

**உசாத்துணைகள்**

Abdullah, R. (2004). Ethnic harmony in Eastern Sri Lanka. In Georg Frerks & Bart Klem (Eds.), *Dealing with diversity: Sri Lankan discourses on peace and conflict* (1st ed., pp. 183-190). The Hague: the Netherlands Institute of International Relations ‘Clingendael’.

Abudllah, R. (2016). Sri Lanka’s Plural Characteristics and Politics of M.H.M.Ashraff. In Rameez Abdullah & M.M.Fazil (Eds.), *Sharing Memories of Dr. M.H.M. Ashraff* (2nd ed., pp. 24-45). Oluvil, Sri Lanka: Viluthukal Publisher.

Ameerdeen. V. (2006). *Ethnic politics of Muslims in Sri Lanka*. Kandy, Sri Lanka: Centre for Minority Studies.

Bandara, K. (2012). Elections Dept. cancels registration of 3 political parties. Retrieved from http://www.dailymirror.lk/16462/elections-dept-cancels-registration-of-3-political-parties.

Busto, M. (2007). The Politics of a Second Largest Minority in Sri Lanka (Master Thesis). University of Oslo, Oslo.

Cader, M.A. (2016). Leader M.H.M.Ashraff: An introduction. In Rameez Abdullah & M.M.Fazil (Eds.), *Sharing Memories of Dr. M.H.M. Ashraff* (2nd ed., pp. 24-45). Oluvil, Sri Lanka: Viluthukal Publisher.

Cader, M.L.A. (1999). *Sri Lanka's 10th general election and Muslims*. Peradeniya, Sri Lanka: Sri Lanka Political Research Society.

Cader, M.L.A. (2002). *Ashraff - the political sage: A study on his political Leadership*. Peradeniya, Sri Lanka: Sri Lanka Political Research Society.

Department of Census and Statistics-Sri Lanka. (2012). *Statistical abstract of the Democratic Socialist Republic of Sri Lanka*. Colombo, Sri Lanka: Department of Census and Statistics-Sri Lanka.

Dewaraja, L. (1994). *The Muslims of Sri Lanka: One thousand years of ethnic harmony 900-1915*. Colombo, Sri Lanka: The Lanka Islamic Foundation.

Farook, L. (2009). *Nobody's people: The forgotten plight of Sri Lanka's Muslims*. Colombo, Sri Lanka: South Asia News Agency.

Fazil, M.M. (2004). The Muslim factor in the Sri Lankan conflict. In Georg Frerks & Bart Klem (Eds.), *Dealing with diversity: Sri Lankan discourses on peace and conflict* (1st ed., pp. 161-182). The Hague: the Netherlands Institute of International Relations 'Clingendael'.

Fazil, M.M. (2009). Fragmentation of Muslim politics in Sri Lanka: A critical analysis of Sri Lanka Muslim Congress (SLMC). In *E-proceedings of the International Conference on Social Sciences and Humanities*, Universiti Kebangsaan Malaysia, Malaysia.

Fazil, M.M. (2016). Uprising of Muslim political movement. In M.A.M.Rameez, M.A.M.Fowsar & M.I.Raizudeen (Eds.), *Gateway to east: Political background of east and 25 years political records of Hizbullah* (1st ed., pp. 59-63). Oluvil, Sri Lanka: Political Science Association, South Eastern University of Sri Lanka.

Fowsar, M.A.M. (2013). Ancient politics of Muslims in eastern Sri Lanka: A short review. *Journal of Modern Thamizh Research*, 1(1), 136-147.

Fowsar, M.A.M. (2016). Political uprising of eastern Muslims and M.H.M.Ashraff. In Rameez Abdullah & M.M.Fazil (Eds.), *Sharing Memories of Dr. M.H.M. Ashraff* (2nd ed., pp. 09-23). Oluvil, Sri Lanka: Viluthukal Publisher.

Imtiyaz. A.R.M. (2007). *The Sri Lanka Muslim Congress: The logic of politics*. Sri Lanka Guardian. Retrieved from https://www.sangam.org/2007/10/SLMC.php?uid=2571.

Ismail, S.M., Abdullah, R. & Fazil, M.M. (2004). The Other Side of the Muslim Nation. In Georg Frerks & Bart Klem (Eds.), *Dealing with diversity: Sri Lankan discourses on peace and conflict* (1st ed., pp. 191-202). The Hague: the Netherlands Institute of International Relations 'Clingendael'.

Jameel, S.H.M. (2012). *Muslims in Sri Lanka's parliament*. Colombo, Sri Lanka: Kumarn Publisher.

Knoerzer, S. (1998). Transformation of Muslim political identity. In Mithran Thiruchelvam & C.S. Dattathreya (Eds.), *Culture and politics of identity in Sri Lanka* (1st ed., pp. 136-167). Colombo, Sri Lanka: International Centre for Ethnic Studies.

Nuhman. MA. (2007). *Sri Lankan Muslims, ethnic identity within cultural diversity*. Colombo, Sri Lanka: International Centre for Ethnic Studies.